உ

திருச்சிற்றம்பலம்

நித்திய வழிபாட்டு முறை

(அனுஷ்டானம்)

அதிகாலையில் படுக்கையை விட்டு எழும்போது “சிவ சிவ” என்று இறைவன் திருநாமத்தைச் சொல்லி மடியிலுள்ள திருநீற்றுப் பையிலிருந்து சிறிது திருநீற்றை எடுத்து நெற்றியில் தரித்துக்கொண்டு எழுந்திருக்கவும்.

1. குளிக்கும்போது

நாம் ஆடும் நீரை இறைவன் வடிவாக எண்ணி கீழ்வரும் பதிகத்தைச் சொல்லிக்கொண்டு குளிக்க.

திருச்சிற்றம்பலம்

களித்துக் கலந்ததோர் காதற்கசிவொடும் காவிரிவாய்க்
குளித்துத் தொழுது முன்நின்ற இப்பத்தரைக் கோதில் செந்தேன்
தெளித்துச் சுவையமுது ஊட்டி அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெரும் செல்வம் ஆக்கும் ஐயாறன் அடித்தலமே.

(அப்பர்- 4.92.7)

திருச்சிற்றம்பலம்

குளித்த பின் தோய்த்து உலர்ந்த ஆடையையும் கோவண ஆடையையும் அணிந்துகொண்டு துலக்கிய சிறுபாத்திரத்தில் தூயநீரை எடுத்துக்கொண்டு தனியிடத்தில் அமர்ந்து வழிபாட்டைத் தொடங்குக. (வழிபாட்டு அறை தனியாக இருப்பின் சாலச் சிறந்தது)

2. பிள்ளையார் வணக்கம்

தலையிற் குட்டிக்கொண்டு வழிபாடு முற்றுப்பெற பிள்ளையாரைக் கீழ்வரும் பாடல்களைச் சொல்லித் துதித்தல்.

(அ) **ஐந்து கரத்தனை யானை முகத்தனை**
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனி ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றனே.

(திருமந்திரம்)

(ஆ) **வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்**
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

(திருமந்திரம்)

(இ) **திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை.

(கபிலதேவ நாயனார் - மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை)

திருச்சிற்றம்பலம்

சற்குரு வணக்கம்

சைவ சமய குருமார்கள் நால்வருக்கும் தனக்குத் தீக்கை அருளிய குருவிற்கும் வணக்கம் சொல்லுதல்.

(அ) **பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்போன் கழல்போற்றி**
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வந்தொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர் திருத்தாள் போற்றி.

(ஆ) **தந்தையாய் ஆவானும் சார்கதி இங்காவானும்**
அந்தமிலா இன்பம் நமக்காவனும் - எந்தமுயிர்
தாம்ஆ குவானும் சரண் ஆகுவானும் அருட்
கோனாகு வானும் குரு.

3. வழிபடும் இடத்தைச் சுத்தி செய்தல்

(ஸ்தான சுத்தி)

[சிறிது தண்ணீரைக் கையில் எடுத்து]

"**பாரிடை ஐந்தாய்ப் பறந்தாய் போற்றி**"

என்று ஓதி வழிபாடு செய்யும் இடத்தில் தெளித்து, அதைத் தூய்மை செய்யவும்.

வழிபாட்டுக்குரிய தண்ணீரை தூய்மை செய்தல்

4. தண்ணீரைச் சிவமாக எண்ணி

[திரவிய சுத்தி]

"**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய்ப் போற்றி**"

என்று மலர் தூவித் தண்ணீரில் சிவலிங்கத் திருமேனியாய் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருவானைக்கா பெருமானை எண்ணி.

வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவா
ஏனைக்காவல் வேண்டுவார்க்கு ஏதும் ஏதம் இல்லையே.

(சம்பந்தர்- 3.53.1)

என்னும் பதிகம் ஓதித் துதித்து

வலதுகைப் பெருவிரலை மடித்துக்கொண்டு, மற்ற விரல்களை நீட்டிக் கவிழ்த்து தண்ணீர் உள்ள குவளையை மூடி திருவைந்தெழுட்தை எண்ணித் துதிக்கவும்.

5. ஆத்மசுத்தி (ஆசமனம்)

(நீரை உட்கொள்ளுதல்)

நடு மூன்று விரல்களாலும் மேற்கண்ட தண்ணீரை மூன்று முறை தலையின்மேல் தெளித்துக்கொண்டு சிறிது நீரை உள்ளங்கையில் எடுத்து இறைவனை எண்ணிக்கொண்டு சிவ தீர்த்தமாக மனத்துட்கொண்டு மூன்று முறை உட்கொண்டு கீழ்வரும் பாடலைச் சொல்லித் துதிக்கவும்.

ஒன்றா வுலகனைத்து மானார் தாமே
யூழிதோ றூழி யுயர்ந்தார் தாமே
நின்றாகி யெங்கு நிமிர்ந்தார் தாமே
நீர்வளிதீ யாகாச மானார் தாமே

கொன்றாடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப்ப ழனை யுடையார் தாமே
சென்றாடு தீர்த்தங்களானார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே

(அப்பர்- 6.78.1)

6. (அ) திருநீற்றைத் தூய்மை செய்தல்

இடது உள்ளங்கையில் திருநீற்றை வைத்து வலக்கையால் முடி வலது தொடைமேல் வைத்துக்கொண்டு

இராவணன் மேலது நீறு எண்ணத்தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவமாவது நீறு
அராவணங் குந்திருமேனி யாலவாயான் திருநீறே.

(சம்பந்தர்- 2.66.8)

என்ற பாடலைச் சொல்லித் துதித்து, திருநீற்றைப் பராசக்தியின் வடிவமாக எண்ணிச் சிந்தித்துத் திருநீற்றைச் சிறிது எடுத்துத் தலை நெற்றி உடல் முதலியவற்றில் பூசிக்கொண்டு திருநீற்றில் முழுக்காடினதாக எண்ணிக்கொண்டு தண்ணீர்விட்டுக் குழைத்துத் திருநீற்றை அணிந்துகொள்ளும் முன் குழைத்த நீற்றை மோதிர விரலால் சிறிது எடுத்து தீய சக்திகளை விலக்க நிருதி மூலையில் தெளித்த பிறகு தலை, நெற்றி, மார்பு, புயங்கள், இரண்டு முழங்கை, இரண்டு மணிக்கட்டு, கொப்புழ், முழங்கால் இரண்டு, வலது, இடது விலாப்புறங்கள் இரண்டு, நடுமுதுகு, கழுத்து ஆகிய பதினாறு இடங்களில் இட்டுக்கொள்ளவும். நெற்றி, மார்பு, தோள்களில் ஆறு அங்குலமும், மற்ற இடங்களில் ஒரு அங்குலமும் கழுத்து முழுவதும் கீழ்வரும் பாடல்களைச் சொல்லித் துதித்துக்கொண்டே அணிந்து கொள்ளவும். (தேகசுத்தி)

(அ) **கருவாய்க் கிடந்துன் கழலே நினையும் கருத்துடையேன்**
உருவாய்த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்
திருவாய்ப் பொழியச் சிவாயநம வென்று நீறணிந்தேன்
தருவாய் சிவகதிநீ பாதிரிப்புலியூர் அரனே. (அப்பர்- 4.94.6)

(ஆ) **சந்திரர் சடையில் வைத்த சங்கரன் சாமவேதி**
அந்தரத் தமரர் பெம்மான் ஆன்நல் வேள்ளூர்தி யான்றன்
மந்திர நமச்சிவாயவாக நீறணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும் வெவ்வழல் விறநிட்டன்றே.

(அப்பர்- 4.77.4)

(இ) **கங்காளன் பூசுங் கவசத்திரு நீற்றை**
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வரே.

(திருமந்திரம்- 10.6.10.1)

திருநீறு அணிந்த பிறகு கைகளை அலம்பி, அலம்பிய நீர் இடது கை மூலம் வரும்படி செய்து இடது கையை முஷ்டியாகப் பிடித்துக்கொண்டு பெருவிரலை

மட்டும் நீட்டி அதன் வழியாக கையில் உள்ள நீர் வடிந்து கீழ் உள்ள பாத்திரத்தில் விழும்படியாக வலக்கை முஷ்டியைத் தாழ்த்தி மல்லாத்திப் பிடித்துக்கொண்டு பெருவிரல் வழியாக வழியாக வடியும் நீரைச் சிவ தீர்த்தமாகப் பாவித்து இடது கையின் விரல்களினால் ஏற்று “சென்றாடு தீர்த்தங்களானார் தாமே” என்று சொல்லி இறைவனைத் துதித்துக்கொண்டே மேலே மும்முறை தெளித்துக்கொண்டு வாயிலும் சிறிது விட்டு அருந்துதல் வேண்டும். (ஆத்மசுத்தி)

(ஆ) திருநீறு அணிதல்

சுத்தி செய்த்ட திருநீற்றை சிறிது எடுத்துக் கொப்புழிலிருந்து கழுத்து வரையிலும், இரு கைகளிலும் மணிக்கட்டுகளிலிருந்து தோள் வரையிலும் சிறிய நேர்கோடாக இழுக்க இதன்மீது மேல் கூறியபடி திருநீற்றைக் குழைத்து 16 இடங்களில் இடுக.

திருநீறு இடவேண்டிய இடம் 16. இப்பதினாறும் இறைவனின் புறத்திருத்தொண்டாம் பதினாறினையும் முறை தவறாது நிறை அன்புடன் இயற்றுதற்கே இவ்வுடல் என்றும் குறிப்பதாகும்.

அவை வருமாறு

1. ஒழுக்கம், 2. அன்பு, 3. அருள், 4. ஆச்சாரம், 5. உபச்சாரம், 6. உறவு, 7. சீலம், 8. தவம், 9. தானம், 10. வந்தித்தல், 11. வணங்கல், 12. வாய்மை, 13. துறவு, 14. அடக்கம், 15. அறிவு, 16. அருச்சித்தல்.

ஆசாரம் - நன்னடை, உபசாரம் - பணிவிடை,
வந்தித்தல் - வழிபாடு, துறவு - கற்புநிறை
அருச்சித்தல் - மலர் தூவி வழிபடல்

ஒழுக்கம், அன்பு, அருள், ஆச்சாரம், உபச்சாரம், உறவி, சீலம், வழுக்கிலா தவம், வந்தனங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை, அழுக்கிலாத் துறவு, அடக்கம், அறிவோடு அருச்சித்தல், ஆதி இழுக்கிலா அறங்கள் ஆனால் இறங்குவான் பணி அறங்கள். (சித்தியார்)

திருச்சிற்றம்பலம்

7. உறுப்புகளைத் தொடுதல்

வாழ்த்த வாயும் நினைக்கமட நெஞ்சம்
தாழ்த்தச் சென்னியும் தந்தான் தாள்போற்றி.

என ஓதிக் கைகளைக் கூப்பித் தலை வணங்குக. இஃது அருளால் பெற்ற இவ்வுடலால் இறைவனின் அகத்திருத் தொண்டு இயற்றும் முறைமைக் குறிப்பாகும்.

உறுப்புக்களைத் தொடும் முறை

வலக்கைப் பெருவிரல் நுனியை அணி விரல் (மோதிர விரல்) நடுவரையிற் சேர்த்து மற்றைய விரல்களை நீக்கி நமது உடலில் ஒன்பது உறுப்புகளையும் அவ்விரல் கொண்டு தொடுக.

இவற்றுள் எட்டாவது எண்ணாகிய ஆக்கையைத் தொடுங்கால் இரு கைவிரல்களையும் தனித்தனி இணைத்துச் சிறிது குவித்துத் தலை முதல் கால் வரை சுட்டி, நெஞ்சின் நேர் வைத்துக் கும்பிடுக. 10, 11, 12 திருக் கண்ணிகளை அன்புடன் ஓதிக் கைகள் இரண்டையும் உச்சிமேற் குவித்துத் தொழுக. இம்மூன்றும் இறை உயிர் தளை என்னும் முப்பொருள் உண்மையைக் குறிக்கும்.

1. **உச்சி**: தலைவனைத் தலையே நீ வணங்காய்

2. **கண்கள்**: கடல் நஞ்சுண்ட கண்டன் தன்னைக்
கண்காள் காண் மின் களோ

3. **செவிகள்**: எரிபோல் மேனிப் பிரான் திறம்
எப்போதும் செவிகாள் கேண் மின்களோ

4. **மூக்கு**: வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்

5. **வாய்**: பேய்வாழ் காட்டகத்து ஆடும்பிரான் தன்னை
வாயே வாழ்த்துக் கண்டாய்

6. **நெஞ்சு**: மஞ்சாடும் மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்

7. **கைகள்**: பைவாய் பரம்பரை ஆர்த்த பரமனைக்
கை காள் கூப்பித் தொழீர்

8. **ஆக்கை**: அரனைப் போற்றி எண்ணாத இவ்
ஆக்கையாற் பயன் என்

9. **கால்கள்**: கோகரணம் சூழாக் கால்களாற் பயனென்

10. **இறை**: உற்றார் யார் உளரோ
உயிர் கொண்டு போம்பொழுது
குற்றாலத்துறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் யாருளரோ

11. **உயிர்**: இறுமாந்து இருப்பன் கொலோ - ஈசன்
பல் கணத்து எண்ணப் பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக் கீழ்ச்சென்று அங்கு
இறுமாந்து இருப்பன் கொலோ;

12. **தளை**: தேவனை என்னுளே தேடிக்
கண்டு கொண்டேன்.

திருச்சிற்றம்பலம்

8. மந்திர சுத்தி

பேராயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானைப் பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் றன்னைத்
திரிபுரங்கள் தீயெழத் திண்சிலை கைக்கொண்டு
போரனைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே. (அப்பர்- 6.54.8)

9. பிராணாயாமம்

வலது சுட்டு விரல் நடுவிரல் இரண்டையும் உள்ளே மடக்கிப் பெருவிரலால் வலது மூக்கை மூடி **ஓம் சிவாய நம** என்று ஐந்து முறை சொல்லி இடது மூக்கால் காற்றை உள்ளே இழுத்துக் காற்றை நிறுத்தி மோதிர விரலால் இடது மூக்கை மூடி வலது மூக்கால் காற்றை வெளிவிடவும். மீண்டும் இது போலவே இடது மூக்கை மூடிக்கொண்டு ஐந்தெழுத்தை எண்ணிக்கொண்டு வலது மூக்கால் காற்றை உள்ளிழுத்து இடது மூக்கால் வெளிவிடுக. இதுபோன்று இயன்றளவு செய்க.

இதுசமயம் கொப்புழுக்கு நான்கு விரல் இடம் கீழ் உள்ள இடமாகிய மூலாதாரம் என்னும் இடத்திலிருந்து குண்டலினி என்னும் சிவசக்தி எழுந்து மேல்நோக்கி மூலாதாரம், கொப்புழ், மார்பு, கழுத்து, புருவமத்தி, உச்சி தலைக்குமேல் பன்னிரண்டங்குலமளவில் உள்ள இடம் ஆகிய உணர்ச்சி நிலையங்களில் எழுந்தருளி விளங்குவதாக எண்ணிப் பிறகு தலைக்குமேல் இரு கைகளையும் கூப்பி வணங்கி மேற்கண்ட சிவசக்தியை அங்கிருந்து கூப்பிய கரத்தினூடேயாக மார்புக்கு கொணர்ந்து மார்பில் எழுந்தருளி விளங்குவதாகக் கொண்டு பஞ்சபுராணம் ஓதித் துதிக்க.

10. பஞ்சபுராணம் என்னும் துதிப்பாடல்கள்

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரியபுராணம் ஆகிய ஐந்து நூல்களையும் பஞ்ச புராணம் என்று சொல்வது மரபு. வழிபாட்டின் போது குறைந்த அளவு மேற்கண்ட நூல்களில் ஒவ்வொருன்றாக ஐந்து பாடல்களாவது பாடித்துதித்தல் வேண்டும். கூடுமானால் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரத்தில் ஒரு பாட்டும், பதினொன்றாம் திருமுறையில் ஒரு பாட்டும், ஆக பன்னிரு திருமுறைகளிலும் ஒவ்வொரு பாட்டாவது சொல்லித் தினந்தோறும் வழிபடுவது சைவருடைய கடமையாகும். மேற்குறிப்பிட்ட பன்னிரு திருமுறைகளும் தவறாமல் ஒவ்வொரு சைவர் இல்லத்திலும் இருக்க வேண்டுவன

அ. **பிடியதன் உரு உமை கொள மிகு கரியது**
வடி கொடு தன தடி வழி படும் அவர் இடர்
கடிகண பதிவர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

(சம்பந்தர்- 1.123.5)

ஆ. **தோடுடைய செவி யன்விடை ஏறியோர் தூவெண் மதிசூடிக்**
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங் கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே.

அருநெறிய மறைவல்ல முனியகன்பொய் கையலர் மேய
பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மான் இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல் வினைதீர்தல் எளிதாமே.

(சம்பந்தர்- 1.1.1)

திருவாசகம்

இ. **அம்மையே அப்பா ஒப்பிலா மணியே**
அன்பினில் விளைந்த ஆரமதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச்சிக் கெனப்பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே

(திருவாசகம்-8.1.37.3)

திருவிசைப்பா

ஈ. **சுண்பணி அரும்பக்கைகள் மொட்டித்தென்**
கலைகணே ஓலம் என்று ஓலிட்டு
என்பெலாம் உருக்கும் அன்பர் தம் கூட்டத்துள்
என்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின்று ஆடப்
பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே

(திருவிசைப்பா- 9.8.5)

திருப்பல்லாண்டு

உ. **மன்னுக தில்லை வளர்க நம்பக்தர்கள் வஞ்சகர் போயகலப்**
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமை கோன் அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னைப்பிறவி அறுக்கநெறி தந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதமே

(திருப்பல்லாண்டு- 9.29.1)

பெரிய புராணம்

ஊ. **நன்மை பெறுகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்**
மன்னுதிருத் தொண்டனார் வணங்கி மகிழ்ந்து எழும்பொழுதில்
உன்னுடை நினைப்பதனை முடிக்கின்றோம் என்று அவர்தம்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்

(பெரிய புராணம்- 12.21.195)

வாழ்த்துப்பா

எ. **வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்**
வீழ்க தன்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.

(சம்பந்தர்-3.54.1)

திருச்சிற்றம்பலம்

11. ஜபம்

மனதைப் புருவ மத்தியில் நிறுத்தி பத்மாசனத்தில் அமர்ந்த வண்ணம் "ஓம் சிவாய நம" என்று 108 தரம் மனத்திற்குள்ளாகவே எண்ணுக.

12. தியானம்

இறைவன் புருவ மத்தியில் ஒளிவடிவாக விளங்குவதாக எண்ணி எந்தவிதமான வேற்று எண்ணமும் இன்றி அமைதியாகச் சிவனைச் சிந்தித்து இருக்க்வும். மேற்கண்டவாறு (அனுஷ்டானத்தை) வழிபாட்டை முடித்துக்கொண்டு புறத்தில் சிவ வழிபாடு தொடங்குதல் வேண்டும்.

இத்துடன் நித்திய வழிபாடு முற்றுப்பெறும். சிவபூசை செய்வோர் இதற்குமேல் இரண்டாம் பகுதியைப் பார்க்க.

திருச்சிற்றம்பலம்

உ

ஆன்மார்த்த மூர்த்தி வழிபாடு

(சிவபூசை)

முதலிற் குறிப்பிட்ட வண்ணம் வழிபாட்டை முடித்துக் கொண்டு சிவபூஜை தொடங்குக.

1. வழிபாட்டிற்கு இறைவன் திருவருள் துணை நின்று வழிபாட்டை முற்றுவிக்க வேண்டுமென்றெண்ணுதல்!

திருச்சிற்றம்பலம்

“வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்

தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே”

(அப்பர்- 6.19.8)

என்ற பாடலைச் சொல்லித் துதிக்கவும்

திருச்சிற்றம்பலம்

2. உள்ளத்தில் இடங்கொண்டிருக்கும் இறைவனை எண்ணுதல்

“தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா யார்கொலோ சதுரர்
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப் பெருந்துறை யுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே”

(திருவாசகம்- 8.1.22.10)

என்ற பாடலைப் சொல்லித் துதிக்கவும். பிறகு இறைவனை உள்ளத்தில் எழுந்தருளி விளங்குபடி எண்ணி

3. (அ) உட்பூசை

ஒரு மலரைத்தலையின் மீது போட்டுக்கொண்டு இறைவன் நமது உள்ளத்தாமரையின்கண் துயில்வதாகப் பாவித்து அவரைத் திருப்பள்ளி எழுச்சி பாடி விழித்தெழச் செய்து திருமுழுக்காட்டி அழகு செய்வித்து அர்ச்சித்து வழிபாடு மானசீகமாக அகத்தின் கண் செய்க.

நமது உடலே கோயிலாகப் பாவித்தல்

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக மன மணியிலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமைய வாட்டிப்
பூசனை யீசனார்க்குப் போற்ற விக்காட்டினோமே"

(அப்பர்- 4.76.4)

திருப்பள்ளியெழுச்சி

"போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்நதது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே"

(திருவாசகம்- 8.1.20.1)

(ஆ) பூதசுத்தி செய்ய

"மண்ணதனில் ஐந்தை மாநீரின் நான்கை
வயங்கு எரியின் முன்றை மாருதத்தின் இரண்டை
விண்னதனில் ஒன்றை விரிகதிரைத்
தண்மதியைத் தாரகைகள் தம்மின் மிக்க
எண்ணதனில் எழுத்தை யேழிசையைக் காமன்
எழில்அழிய வெரியுமிழ்ந்த இமையா நெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேன் நானே"

(அப்பர்- 6.60.3)

என்ற பாடலைப்பாடி எல்லாம் சிவமாக எண்ணித் தியானித்த பின்,

4. (ஸ்தான சுத்தி) இடத்தைச் சுத்தம் செய்தல்

சிறிது நீரை எடுத்துப் "பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி" என்று கூறி வழிபாடு செய்யும் இடத்தில் தெளித்துச் சுத்தம் செய்து கொள்ளவும்.

திரவியசுத்தி

திருமுழுக்காட்டும் நீர் நிறைந்த பாத்திரத்தை வலது கைப் பெருவிரலை மடித்து மற்றைய நான்கு விரல்களையும் நீட்டி கையை கவிழ்த்து மூடி அந்நீரைச் சிவமாகப் பாவித்துக் கீழ்வரும் பாடலைச் சொல்லித் துதிக்க

"**ஆவாகி ஆவினில் ஐந்துமாகி**
அறிவாகி அழலாகி அவியுமாகி
நாவாகி நாவுக்கோர் உரையுமாகி
நாதனாய் வேதத்தின் உள்ளோனாகிப்
பூவாகிப் பூவக்கோர் நாற்றமாகிப்
புக்குளால் வாசமாய் நின்றானாகித்
தேவாகித் தேவர் முதலுமாகிச்
செழுஞ்சுடராய்ச் சென்றடிகன் நின்றவாறே"

(அப்பர்-6.94.8)

"**ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை**
இப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே
கூவிஅம ருலகனைத்து முருவிப்போகக்
குறியில் அறுகுணத் தாண்டு கொண்டார் போலும்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே."

(அப்பர்-6.75.10)

என்ற பாடலைச் சொல்லித் துதித்து மலர்களால் அந்நீரை அர்ச்சித்து அதன்பிறகு அர்க்கிய பாத்திரங்களில் அந்நீரை நிரப்புக.

5. மந்திர சுத்தி

"பேராயிரம் பரவி வானோ ரேத்தும்
பெம்மானைப் பிரிவிலா அரியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப் பானை
மந்திரமும் தந்திரமும் மருந்து மாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழுத்திண் சிலைக் கைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப்
போற்றாதே ஆற்றநாள் கோக்கினேனே"

(அப்பர்- 6.54.8)

6. பரிதி வழிபாடு

(சிவசூரிய வழிபாடு)

சிவம் எங்கும் கலந்து நிறைந்து நின்றாலும் அட்டமூர்த்தமாக எட்டு இடங்களில் விளங்கித் தோன்றுகின்றது. அவையாவன; மண், நீர், தீ, காற்று, வான், உயிர்கள், சூரியன், சந்திரன். ஆகவே சிவபூசை செய்யும் போது சூரிய மண்டலத்தில் விளங்கித் தோன்றும் சதாசிவ மூர்த்தியை வழிபடவும்.

ஒரு மலரை எடுத்து வழிபாட்டு மூர்த்திக்குக் கிழக்கில்

"அருக்கினில் சோதி அமைத்தோன் காண்க"

என்று சொல்லி சிவசூரியனாகப் பாவித்து, "பரிதிப் பெருமான் பதமலர் வாழ்க" என்று மலரால் அர்ச்சித்து தூபம் தீபம் காட்டி வழிபட்டு, கீழ்வரும் பாடலைச் சொல்லி கைகூப்பி வணங்குக.

"அனைத்து வேடமாம் அம்பலக் கூத்தனைத்
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனோ"

(அப்பர்- 5.2.1)

6. துவார பூசை செய்ய

வழிபாடு செய்யும் இடத்தில் ஐந்து திருமதில்களோடு ஒரு சிவாலயம் இருப்பதாகப் பாவித்து முதலில் வாயிற் காலவரை வாழ்த்தி வழிபடுதல்.

திருப்புன்கூர்

"நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
கற்ற சூதன் நற்சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம் புல்லன் என்று இவர்கள்
குற்றம் செய்யினுங் குணமெனக் கருதும்
கொள்கைகண்டு நின்குரை கழல் அடைந்தேன்

பெற்றிரன் மணிக்கமலங்கள் மலரும்
பொய்கை சூழ் திருப்புன் கூறுளானே"

(சுந்தரர்- 7.55.4)

"**மூவெயில் செற்றஞான்று உயர்ந்த மூவரில்**
இருவர் நின் திருக்கோயிலின் வாய்தல்
காவலாளர் என்று ஏவிய பின்னை
யொருவன் நீ கரி காடரங்காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
மணிமுழா முழக்க அருள் செய்த
தேவதேவ நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன் கூறுளானே" (சுந்தரர்- 7.55.8)

இரண்டு மலர்களை வாயில் காலராக வழிபாட்டு இடத்தில் சிவலிங்கத்திற்கு முன்வைத்து மேற்சொன்ன பாடலைச் சொல்லி வழிபடுக.

7. பூசை பெட்டகத்தைத் திறக்க

"**பண்ணின் நேர்மொழியாளுமை பங்கரோ**
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணினால் உமைக் காண கதவினைத்
திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே"

(அப்பர்- 5.10.1)

என்ற பாடலைச் சொல்லித் துதித்துப் பெட்டியைத் திறந்து பெட்டகக் கோயிலினின் றுடையவரை எழுந்தருளப்பண்ணிக் கீழ்வரும் பாடலைச் சொல்லித் துதிக்க.

"**ஆண்டானை அடியேனை ஆளாக் கொண்டு**
அடியோடு முடிஅயன் மால் அறியாவண்ணம்
நீண்டானை நெடுங்களமா நகரான் தன்னை
நேமிவான் படையான் நீள உரவோ னாகம்
கீண்டானைக் கேதாரம் மேவி னானைக்
கேடிலியைக் கிளர்பொறி வாளர வோடுஎன்பு
பூண்டானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றாதே ஆற்றநாள் போக்கினேனே"

(அப்பர்- 6.54.1)

8. திருமுழுக்காட்டும் பலகையில் உடையவரை எழுந்தருளச் செய்தபின் சொல்ல

"**பந்த பாச மறுத் தெனை யாட் கொண்ட**
மைந்தனை மணவாளனை மாமலர்க்
கந்த நீர்க் கடுவாய்க் கரைத் தென்புத்தூர்
எந்தை ஈசனைக் கண்டினி தாயிற்றே" (அப்பர்- 5.62.6)

9. இலிங்க சுத்தி

இறைவனை சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருளச் செய்யும் முன்னர் சுத்தி செய்ய

வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானென தென்றவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே

(திருவாசகம்- 8.1.5.15)

தூய்மை செய்து வைத்துள்ள நீரை சிறிது மலரால் எடுத்துத் திருவுருவின் மீது ஐந்து எழுத்தை ஓதித் தெளித்து மூர்த்தியை சுத்தம் செய்துகொண்ட பிறகு இருகைகளாளும் மலர்களை எடுத்து உள்ளடக்கிக் கூப்பிய கரத்தைத் தலைக்குமேல் உயர்த்திக் கைகளை சேர்த்தியபடியே விரல்களை மட்டும் பூக்குடலை போல் விரித்துப் பரவெளியில் விளங்கும் இறைவனைக் கையில் உள்ள மலர்களின் மூலம் இறங்கி வருவதாக பாவனை செய்து புருவமத்திக்குக் கொண்டு வந்து இறைவனை எண்ணிப் பிறகு மார்புக்கு நேராக வைத்துத் தனது உள்ளத்திலுள்ள இறைவன் தன் முன்னால் உள்ள சிவலிங்கத் திருமேனியில் எழுந்தருள வேண்டிக் கையில் உள்ள மலரைச் சொரிந்து இறைவனை எழுந்தருள வேண்டுக.

10. நிறுவுதல் (ஆவாஹனம்)

"**மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்**
    புலனைந்தின் வழியடைத்(து) அமுதே
ஊறிநின் றென்னுள் ஏழுபரஞ் சோதி
    உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
    திருப்பெருந்துறை யுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
    இன்பமே என்னுடை அன்பே."

(திருவாசகம்- 8.1.22.1)

என்ற பாடலைச் சொல்லி திருஉருவத்தில் இறைவன் எழுந்தருளியதாகப் பாவித்துத் திருவுருவத்தின் மீது மலர் தூவவும்.

11. திருவுருவை இறைவனாகக் காணுதல்

"**அதுபழச் சுவையென அமுதென அறிதற்**
    கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
    எங்களை ஆண்டு கொண்டிருங்கெழுந் தருளும்

மதுவளர் பொழில் திருவுத்தர கோச
மங்கையுள்ளாய் திருபெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறாது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே."

(திருவாசகம்- 8.1.20.7)

12. அஷ்ட புஷ்பஞ் சாத்த

(அ) "**அட்ட மாமலர் சூடி யடும்பொடு**
வட்டப் புன் சடைமா மறைக் காடரோ
நட்டமாடியு நான்மறை பாடியும்
இட்ட மாக இருக்கும் இடமிதே"

(அப்பர்- 5.9.4)

மலர் தூவி வணங்குக

(ஆ) "**எல்லாஞ் சிவனென்ன நின்றாய் போற்றி**
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாட் படையாய் போற்றி
கொல்லுங்கூற் றொன்றை உதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக் கரியாய் போற்றி
கற்றார் இடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியன் அரணம் எய்தாய் போற்றி
வீரட்டங் காதல் விமலா போற்றி" (அப்பர்- 6.5.1)

என்ற பாடலால் மலர் தூவி அர்ச்சிக்க.

13. அரிக்கியம் (நீர் கொடுத்தல்)

"**தோடொரு காதனாகி யொருகா திலங்கு சுரி சங்கு நின்று புரளக்**
காடிடமாக நின்று கனலாடும் எந்தை யிடமாய காதல் நகர்தான்
வீடுடன் எய்துவார்கள் விதி யென்று சென்று வெறி நீர் தெளிப்ப விரலால்
நாடுஉடன் ஆடுசெம்மை யொலிவெள்ள மாரு நனிபள்ளி போலும் நமர்காள்"

(சம்பந்தர்- 2.84.5)

மூர்த்திக்கு முன்னர் பாத்தியம் ஆசமனம் அர்க்கியம் ஆகிய மூன்றுக்கும் மூன்று கிண்ணங்களை வைத்து அவற்றில் தூய்மை செய்த நீரை நிரப்புக. பாத்தியம் கால்களைச் சுத்தம் செய்யவும். ஆசமனம் - குடிக்க நீர் கொடுக்கவும். அர்க்கியம் - குளிக்க நீர் கொடுக்கவும் ஆகும். இவை நம் வீட்டுக்கு வரும் விருந்தினர்க்கு முதலில் கால் கழுவ நீர் கொடுத்துப் பின் களைப்புத் தீர நீர் அருந்தக் கொடுத்துப் பின் குளிக்கச் செய்வதை ஒக்கும். பாத்தியம், ஆசமனம் அர்க்கியம் இவற்றை மலரினால் எடுத்து இறைவனுக்கு மேற்சொன்ன முறையில்

பாத்தியம் இறைவனது திருவடிகளிலும் ஆசமனம் முகத்திற்கு நேராகவும் அர்க்கியம் இறைவனது திருமுடிக் கண்ணும் கொடுக்க.

14. திருமுழுக்காட்டுதல்

சிவபுராணத்தை ஓதிக்கொண்டே திருமுழுக்காட்டி ஆடை அணிவித்துப் பூமாலை அணிவித்து திருநீறு சந்தனம் முதலியன சாத்தி அழகு படுத்தல் வேண்டும். சிறப்பு நாட்களில் கீழ்க் கண்ட பாடல்களைச் சொல்லிக் கொண்டு இதிற்கண்ட பொருள்களினால் முழுக்காட்டவும்.

எண்ணெய்க் காப்பு

"ஆடினாய்நறு நெய்யோடு பால் தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாயிடமா நறுங் கொன்றை நயந்தவனே
பாடினாய் மறை யோடு பல்கீதமும்
பல்சடைப்பணி கால் கதிர்வெண் திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்க எம்தொல் வினையே"

(சம்பந்தர்- 3.1.1)

பஞ்ச கவ்வியம்

"பாவமும் பழி பற்றற வேண்டுவீர்
ஆவில் ஐஞ்சு உகந்தாடும் அவன் கழல்
மேவராய் மிகவும் மகிழ்ந்துள்குமின்
காவலாளன் கலந்து அருள் செய்யுமே"

(அப்பர்-5.99.1)

பஞ்சாமிர்தம்

"பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்றாட்டி
நூலினால் மணமாலை கொணர்ந்து அடியார் புரிந்தேத்தச்
சேலினாற் வயல் புடைசூழ் செங்காட்டங்குடி யதனுள்
காலினாற் கூற்று உதைத்தான் கணபதீசச் சர்த்தானே"

(சம்பந்தர்-1.61.5)

நெய் முழுக்கு ஆட்ட

"நெய்யாடி நின்மலனே நீல கண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதி யானே
மையாடு கண்மடவாள் பாகத் தானே
மான் தோலுடையாய் மகிழ்ந்து நின்றாய்
கொய்யாடு கூவிளங் கொன்றை மாலை
கொண்டடியேன் நான் இட்டுக் கூறி நின்று

பொய்யாத சேவடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே"

(அப்பர்-6.99.8)

பால் முழுக்காட்ட

"பாலையாடுவர் பன்மறை யோதுவர்
சேலையாடிய கண்ணுமை பங்கனார்
வேலையார் விடமுண்ட வெண்காடர்க்கு
மாலையாவது மாண்டவர் அங்கமே"

(அப்பர்-5.49.10)

தயிர் முழுக்காட்ட

"நெய்யும் பாலும் தயிருங் கொண்டு நித்தல் பூசனை செய்யலுற்றார்
கையிலொன்றும் காணமில்லை கழலடி தொழுது உய்யின் அல்லால்
ஐவர் கொண்டு இங்கு ஆட்ட ஆடி ஆழ்குழிப் பட்டு அழுந்துவேற்கு
உய்யுமாறு ஒன்று அருளிச் துய்யீர் ஓணகாந்தன் தளியுவீரே"

(சுந்தரர்-7.5.1)

தேன் முழுக்காட்ட

"வான நாடனே வழித்துணை மருந்தே
மாசிலா மணியே மறைப் பொருளே
ஏனமா எயிறு ஆமையும் எலும்பும்
ஈசு தாங்கிய மார்புடையானே
தேன் நெய் பால் தயிர் ஆட்டு உகந்தானே
தேவனே திரு ஆவடு துறையுள்
ஆனையே யெனை அஞ்சல் என்று அருளாய்
ஆரெனக்கு உறவு அமரர்கள் ஏறே"

(சுந்தரர்-7.70.9)

கருப்பஞ்சாறு முழுக்காட்ட

"ஆலைப்படு கரும்பின் சாருபோல
அண்ணிக்கும் அஞ்செழுத்தின் நாமத் தான்காண்
சீலமுடையடியார் சிந்தை யான்காண்
திரிபுர மூன்று எரிபடுத்த சிலை யினான்காண்
பாலினொடு தயிர் நறுநெய் யாடினான் காண்
பண்டரங்க வேடன்காண் பலிதேர் வான்காண்
வேலை விடமுண்ட மிடற்றி னான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலையானே"

(அப்பர்-6.52.2)

இளநீர் முழுக்காட்ட

“நெய்யி னொடு பால் இளநீர் ஆடினான் காண்
நித்தன் மணவாளன்னன நிற்கின் றான்காண்
கையின் மழுவா ளோடுமான் ஏந்தி னான்காண்
காலன்உயிர் காலாற் கழிவித் தான்காண்
செய்யதிரு மேனிவெண் ணீற்றி னான்காண்
செஞ்சடை மேல்வெண்மதி யஞ்சேர்த்தி னான்காண்
வெய்யகனல் விளையாட்டு ஆடி னான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலையானே”

(அப்பர்-6.52.5)

சந்தனக்குழம்பு ஆட்ட

“சுண்ணவெண் சந்தனச் சாந்துஞ் சுடர்திங்கட்சூளா மணியும்
வண்ணவுரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரன் முரன் ஏறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை”

(அப்பர்-4.2.1)

நல்ல தண்ணீர் ஆட்ட

“தடங்கொண்ட தோர்தாமரைப் பொன்முடி தன்மேற்
குடங்கொண்டு அடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படங்கொண்ட தோர்பாம் பரையார்த்த பரமன்
இடங்கொண்டு டிருந்தான் தன் இடை மருதீதோ”

(சம்பந்தர்-1.32.2)

உடையவரைப் பீடத்தில் எழுந்தருளப் பண்ண

“கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயு என்பார் தாமிருவர்
புள்ளானார்க்கு அரையன்இடம் புள்ளிருக்கு வேளூரே”

(சம்பந்தர்-2.43.1)

கோவண உடை பாவனை சாத்த

“பாவண மேவுசொன் மாலையிற் பல
நாவணங் கொள்கையின் நவின்ற செய்கையர்
ஆவணங் கொண் டெமையாள் வராயினும்
கோவணங் கொள்கையர் கொள்ளிக் காடரே”

(சம்பந்தர்-3.16.4)

பரிவட்டம் (ஆடை சாத்த)

"சுட்டிட்டதலை கையேந்திக் கனல்எரி ஆடிச்சீரிச்
சுட்டிட்ட நீறுபூசிக் சுடுபிணக் காடராகி
விட்டிட்ட வேட்கையார்க்கு வேறுஇருந் தருள்கள்செய்து
பட்டிட்ட உடையராகிப் பருப்பதம் நோக்கினாரே"

(அப்பர்-4.58.4)

திருநீறு சாத்த

"மந்திர மாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருவால வாயான் திருநீறே"

"ஆற்றல்அடல் விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலிநிலாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன்உடல் உற்றதீப்பிணி ஆயின தீர
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே""

(சம்பந்தர்-2.66.1)

சப்தனஞ் சாத்த

"ஆளான அடியவர்கட்கு அன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியைதான் அபயங் புக்க
தானானைத் தன்ஒப்பார் இல்லா தானைச்
சந்தனமுங் குங்குமமுஞ் சாத்துந் தோய்ந்த
தோளானைத் தோளாத முத்தொப் பானைத்
தூவெளுத்த கோவணத்தை அரையில் ஆர்த்த
கீளானைக் கீழ்வேளூர் ஆளுங் கோவைக்
கேடிலியை நாடுமவர் கேடி லாரே"

(அப்பர்-6.67.1)

பூணூல் சாத்த

"முத்தேர் நகையா ளிடமாகத் தம்மார்பில் வெண்ணூல்பூண்டு
தெத்தேர் மலர்சடையில் வைத்தா ரிடம்போலுஞ் சோலைசூழ்ந்த
அத்தேன் அளியுன் களியால் இசைமுரல ஆலத்தும்பி
தெத்தேயென முரலக் கேட்டார் வினைகெடுக்குந் திருநணாவே"

(சம்பந்தர்-2.72.5)

மலர் சூட்ட

"போது தாதொடு கொண்டு புனைத்துடன்
தாதுஅவிழ் சடைச் சங்கரன் பாதத்துள்
வாதை தீர்க்க வென்றேத்திப் பராய்த்துறைச்
சோதியானைத் தொழுதெழுந்து உய்மினே"

(அப்பர்-5.30.5)

15. மலர் வணக்கம் (அர்ச்சனை)

"கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
அல்லல் அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருதே போற்றி
செற்றவர் தம் புரமெறித்த சிவனே போற்றி
திருமூலட்டனானே போற்றி போற்றி."

(அப்பர்-6.32.1)

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆள்என்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி யுள்ளே யொளித்தாய் போற்றி
ஓவாத சத்தத்தொலியே போற்றி
ஆற்றாகி யங்கே யமர்ந்தாய் போற்றி
ஆறங்க நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி."

(அப்பர்-6.55.1)

"உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா விலங்கைக்கோன் றன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின் சோற்கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்னா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி."

(அப்பர்-6.55.11)

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
ஏகம்பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந்தானும் உடனே காண்க" (திருவாசகம்)

என்று கூறி மலர்தூவி வழிபடவேண்டும். பிறகு இறைவனுக்கு உரிய உணவை முன்னால் வைத்து

16. தூபம் காட்டுதல்

"சலம்பூ வொடுதூப மறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
உன்னா மமென்னா வில்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண்டு ழல்வாய்
உடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில்
வீரட்டானத் துறையம் மானே"

(அப்பர்-4.1.6)

என்ற பாடலைச் சொல்லித் தூபங் காட்டி மலரில் நீரை எடுத்து இறைவனை உண்ணுபடி ஏழுமுறை உணைவக் கைகாட்டி முன்கூறிய "ஆலந்தான் உகந்து அமுது செய்தானை" என்ற பாடலைச் சொல்லிக்கொண்டே உண்பித்தும், பிறகு பாத்யம் இருமுறையும் ஆசமனம் மும்முறையும் அர்க்கியம் ஒரு முறையும் கொடுக்க.

17. பின்வரும் பாடலைச் சொல்லித் தீபங் காட்டுதல்

"ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவிமாகிச்
சோதியாய் உணர்வுமாகி தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி"

(பெரிய புராணம்-12.1.1)

18. கற்பூரங் காட்டல்

"கற்பனை கடந்த சோதிக் கருணையே உருவமாகி
அற்புதக் கோல நீடி அருமறைச் சிரத்தின் மேலாம்
சிற்பரவியோம மாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி"

(பெரிய புராணம்-12.1.2)

என்று சொல்லித் துதிக்கவும். பிறகு பன்னிரு திருமுறைகளை ஓதித் துதித்தல் வேண்டும்.

19. துதிப்பாடல் (தோத்திரம்)

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம், பதினொன்றாம் திருமுறை, பெரிய புராணம் ஆகிய திருமுறைகளில் ஒவ்வொரு பாடலைச் சொல்லித் துதித்து 'வாழ்க அந்தணர்' முதலிய வாழ்த்துக் கூறுதல் வேண்டு,.

தேவாரம்

"மந்திர மாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருவால வாயான் திருநீறே"

(சம்பந்தர்-2.66.1)

திருவாசகம்

"வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும்
அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே."

(திருவாசகம்-8.1.33.6)

திருவிசைப்பா

"கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே."

(திருவிசைப்பா-9.5.2)

திருப்பல்லாண்டு

"பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே."

(திருப்பல்லாண்டு-9.29.9)

திருமந்திரம்

"யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே."

(திருமந்திரம்-10.1.19.2)

பதினொன்றாம் திருமுறை

“தாயும் நீயே தந்தையும் நீயே
விண்முதற்பூதம் ஐந்தவை நீயே
புத்தியும் நீயே முத்தியும் நீயே
சொலற்கருந் தன்மைத் தொல்லோய் நீயே
கூடல் ஆலவாய்க் குழகன் ஆவ
தறியா தருந்தமிழ் பழித்தனன் அடியேன்.”

(நக்கீரதேவ நாயனார்-பெருந்தேவபாணி)

பெரிய புராணம்

“இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.”

(காரைக்காலம்மையார் புராணம்-12.24.60)

வாழ்த்து

“வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.”

(சம்பந்தர்-3.54.1)

மீண்டும் கற்பூரம் காட்டி வைத்த பின்னர் இறைவனுக்கு அணிந்த மலரில் ஒன்றை எடுத்துக் கீழ்வரும் பாடலைச் சொல்லிச் சண்டிகேஸ்வர நாயனாரை எண்ணி சிவலிங்கத் திருமேனியின் கோமுகம் உள்ள பக்கம் வைத்து சண்டிகேஸ்வரரை வணங்கி இறைவனுக்கு ஊட்டிய உணவில் சிறிது தனியாக எடுத்து வைத்து சண்டிகேஸ்வரருக்கு ஊட்டி வழிபடவும்.

20. சண்டிகேஸ்வரர் துதி

“பொன்னக் கடுக்கை முடிவேய்ந்த புனிதற் அமைக்கும் பொருளன்றி
மின்னும் கலன் ஆடைகள் பிறவும், வேறு தமக்கு என்று அமையாமே
மன்னும் தலைவன் பூசனையின் மல்கும் பயனை அடியார்கள்
துன்னும் படிபூசனை கொள்ளும் தூயோன் அடித்தாமரை தொழுவாம்”

21. இறைவன் திருவருளைப் பெற்று வினை நீக்கம் பெறுதல்

இறைவன் திருவருளாக எண்ணிச் சிறிது திருநீற்றை எடுத்துக் கீழ்வரும் பாடலைச் சொல்லிக் கொண்டு நெற்றியில் உத்தூளனமாக அணிந்துக்கொண்டு திருவருளைப் பெற்றதாகப் பாவித்துக் கொள்க.

"**படைக்கலமாகவுன்னாமத் தெழுத்தஞ் செனாவிற் கொண்டேன்**
இடைக்கலமல்லே னெழுபிறப்பும் முனக்காட் செய்கின்றேன்
துடைக்கினும் போகேன் றெழுது வணங்கித்தூ நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாயணி தில்லைச் சிற்றம் பலத்தானே."

(அப்பர்-4.81.8)

22. ஜெபம், தியானம்

பிறகு பத்மானசத்திலமர்ந்து 108 முறை குருவினிடம் உபதேச முறையில் பெற்ற மூல மந்திரத்தை எண்ணி வழிபடவும்.

23. மந்திரம், செயல், ஆன்மா மூன்றையும் இறைவனுக்கே ஒப்புக் கொடுத்தல்

"**முன்னே யுரைத்தால் முகமனே யொக்குஇம் மூவுலகுக்கும்**
அன்னையு மத்தனுமாவாய ழல்வணா நீயலையோ
உன்னை நினைந்தே சுழியுமென்னாவி கழிந்ததற்பின்
என்னை மறக்கப் பேறாயெம் பிரானுன்னை வேண்டியதே."

(அப்பர்-4.112.3)

"**கண்ணார் நுதலோய் கழலிணைகள் கண்டேன் கண்கள் களிகூர**
எண்ணா திரவும் பகலும்நான் அவையே எண்ணும் அதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும் வந்துன் கழற்கே புகுமாறும்
அண்ன எண்ணக் கடவேனோ அடைமை சால அழகுடைத்தே."

(திருவாசகம்-8.1.33.9)

"**அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமுங்**
குன்றே அனையாய் என்னைஆட் கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூ றெனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே."

(திருவாசகம்-8.1.33.7)

என்ற பாடல்களைச் சொல்லி அர்க்கிய நீரை ஒரு பூவினால் எடுத்து மந்திரம், செயல், ஆன்மா மூன்றையும் இறைவனுக்கு ஒப்புக் கொடுத்ததாகப் பாவித்து விடுக.

24. வழிபாட்டிலுள்ள குற்றம் குறைகளை மன்னிக்க இறைவனை வேண்டுதல்

"**பொன்னும் மெய்ப்பொருளுந்தரு வானைப்**
போகமு திருவும் புணர்ப்பானை
பின்னை என்பிழையைப் பொறுப் பானைப்
பிழையெலாந் தவிரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணா
எம்மானை யெனிவந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழனந்தணி
ஆரூரானை மறக்கலுமாமே." (சுந்தரர்-7.59.1)

என்று சொல்லி வணங்கி விடை பெறுதல்.

தலை, மூக்கு, காதுகளிரண்டு புயங்களிரண்டு, முழங்கால்களிரண்டு, ஆகிய எட்டுறுப்புகளும் நிலம் தோய மும்முறை எழுந்து நின்று விழுந்து வணங்கி இறைவனிடம் விடை பெற்றுக் கீழ் வரும் பாடலைச் சொல்லி இறைவனை உள்ளத்தில் அமரச்செய்தல் வேண்டும்.

25. உள்ளத்தில் அமரச்செய்தல் (சயனம்)

"கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை கரவார்பால்
விரவாடும் பெருமானை விடையேறும் வித்தகனை
அரவாட்ட் சடைதாழ் அங்கையினி லனலேந்தி
இரவாடும் பெருமானை யென்மனத்தே வைத்தேனே."

(அப்பர்-4.7.1)

"சீரார் பவளங்கால் முத்தம் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாண்மலர்த்தான் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தரகோச மங்கை
ஆரா அமுதின் அருள் தாளிணை பாடிப்
போராற் வேற்கண் மடவீர் பொன்னூசல் ஆடாமோ."

(திருவாசகம்-8.1.16.1)